செ.வெ.எண்: 762 நாள்: 20.11.2020

# தஞ்சாவூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை தொடர்பாக அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப, அவர்கள் தகவல்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை தற்சமயம் தீவிரமடைந்துள்ளது. வடகிழக்கு பருவமழை காலமான அக்டோபர் 1-ம் தேதி முதல் டிசம்பர் இறுதி வரை உள்ள காலத்தில் வழக்கமாக 637 மி.மீ மழையளவு இருக்கும் இதில் 2020-ம் ஆண்டு இன்று (19.11.2020) வரை 177.39 மி.மீ மட்டுமே மழை பொழிந்துள்ளது. ஆண்டு சராசரி மழையளவு 1098 மி.மீ. பெய்யவேண்டியதில் 19.11.2020 வரை 578.47 மி.மீ அளவிற்கு மழை பொழிந்துள்ளது. இது 52.67 சதவீதம் ஆகும்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் ஏற்கனவே ஏற்பட்டுள்ள பேரிடர் பாதிப்புகளின் அடிப்படையில், பருவமழைக்காலங்களில் பாதிப்புகள் ஏற்படக்கூடிய பகுதிகளாக 195 கிராமங்கள் கண்டறியப்பட்டுள்ளன. அவற்றில் இந்த ஆண்டு பருவமழைக்காலத்தில் பாதிப்புகள் ஏதும் ஏற்படாதவாறு அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பருவமழை பாதிப்புகளை தவிர்ப்பதற்கு மாவட்ட அளவில் ஒரு குழுவும், ஒவ்வொரு வருவாய் கோட்டங்களுக்கும் ஒரு மாவட்ட வருவாய் அலுவலர் நிலை அலுவலரும், ஒவ்வொரு வட்டங்களுக்கும் ஒரு துணை ஆட்சியர் நிலை அலுவலரும், மாவட்டத்திலுள்ள 50 சரகங்களுக்கும் வட்டாட்சியர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் நிலை அலுவலர்களும் மண்டல அலுவலர்களாக நியமனம் செய்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் நிவாரணப்பணிகளை மேற்கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் பேரிடர் பாதிப்புகளின்போது பொதுமக்களை தங்க வைப்பதற்கு ஏதுவாக புதிதாக கட்டப்பட்டுள்ள 14 பல்நோக்கு பாதுகாப்பு மையங்கள் உட்பட 251 நிவாரண மையங்கள் கண்டறியப்பட்டு தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் மொத்தமுள்ள 774 பாலங்கள் மற்றும் 10135 சிறுபாலங்களில் வடகிழக்கு பருவமழை காலத்தில் நீர்தேங்காமல் செல்லும் வகையில் 774 பாலங்களும் 9872 சிறுபாலங்களும் சுத்தம் செய்யப்பட்டுள்ளன. அவசர காலங்களில் பேரிடரால் ஏற்படும் உடைப்புகளை சரிசெய்வதற்கு 83 இடங்களில் 1,42,998 எண்ணிக்கையிலான மணல் மூட்டைகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

பேரிடர் காலங்களில் மாவட்ட நிர்வாகத்திற்கு மீட்பு மற்றும் நிவாரணப்பணிகளில் களப்பணிகளின்போது உதவி செய்வதற்காக 2398 முதல்நிலை கடமையாற்றுபவர்கள் கண்டறியப்பட்டு அவர்களுக்கு தேவையான பயிற்சிகள் வழங்கப்பட்டு தயார்நிலையில் உள்ளனர்.

மேலும், மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அனைத்து துறை அலுவலர்களையும் ஒருங்கிணைத்து மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் மற்றும் மாவட்ட பேரிடர் மேலாண்மை குழுக்கூட்டம் மாவட்ட ஆட்சியர் தலைமையில் இரண்டு முறையும், மாவட்டத்திற்கான கண்காணிப்பு அலுவலர் தலைமையில் ஒரு ஆய்வுக்கூட்டமும் நடத்தப்பட்டு, பேரிடர் தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தொய்வின்றி ஒருங்கிணைந்து மேற்கொள்ளுமாறும், மீட்பு மற்றும் நிவாரணப்பணிகளுக்கு தயார் நிலையில் இருக்குமாறும் அனைத்து அலுவலர்களுக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

<u>பொதுமக்களுக்கான அறிவுரை</u>

பேரிடர் காலங்களில் பாதிப்புகளிலிருந்து பொதுமக்கள் தங்களை பாதுகாத்து கொள்வதற்கு கீழ்க்கண்ட வழிமுறைகளை பின்பற்றுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

1) தஞ்சாவூர் மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருவதால் இடி மற்றும் மின்னல்கள் அடிக்கடி ஏற்பட வாய்ப்புள்ளது. இடி இடிக்கும் நேரத்தில் பொதுமக்கள் மரத்தின் அடியில் நிற்கவேண்டாம். ஆறு, ஏரி, குளம் மற்றும் குட்டை போன்ற நீர்நிலைகளில் குளிக்கவேண்டாம். திறந்த வெளியில் இருக்கக்கூடாது. இருசக்கர வாகனங்கள் மற்றும் மிதி வண்டிகளில் பயணம் செய்வதை தவிர்க்க வேண்டும். மின் கடத்தும் சாதனங்களை உபயோகிக்க கூடாது. திறந்த வெளியிலுள்ள இரும்பு பைப்புகள், கொடிக்கம்பங்கள் ஆகியவற்றை தொடக்கூடாது.

2) வெள்ளம் மற்றும் கனமழை காலங்களில் பாதுகாப்பற்ற பழைய பழுதான கட்டடங்களில் தங்கவேண்டாம். கனமழை மற்றும் வெள்ளக்காலங்களில் பொதுமக்கள் ஆறு மற்றும் ஏரிகளில் குளிக்கவோ அவற்றை கடந்து செல்லவோ கூடாது. கொதிக்க வைத்த நீரை மட்டுமே அருந்தவேண்டும். அவசர காலத்திற்கு தேவையான உடைகள், மருந்து பொருள்கள், விலை உயர்ந்த பொருள்கள், ஆவணங்கள் ஆகியவற்றை நீர் புகாத பைகளில் பாதுகாப்பாக வைத்துக்கொள்ளவேண்டும். வெள்ளம் ஏற்பட்டால் பாதுகாப்பான இடங்களை சென்றடைவதற்கு உரிய வழிகளை அறிந்து வைத்திருக்க வேண்டும். வெளியில் செல்ல நேர்ந்தால் மின்சாரம் மற்றும் சமையல் எரிவாயு இணைப்பினை அணைத்து வைத்து விட்டுச் செல்லவேண்டும்.

3) புயல் மற்றும் சூறாவளி எச்சரிக்கை விடுக்கப்பட்டால் மீனவர்கள் கடலுக்குள் செல்லக்கூடாது. படகுகளையும், கட்டுமரங்களையும் பாதுகாப்பான முறையில் கட்டி வைக்க

வேண்டும். குடியிருப்பின் மேல் மாடிகளில் தங்கியிருப்பதை தவிர்க்கவேண்டும். கதவுகள், ஜன்னல்கள் ஆகியவற்றை உறுதியாக மூடி வைக்கவேண்டும்.

கனமழை மற்றும் இயற்கை இடர்பாடுகள் தொடர்பான அரசின் எச்சரிக்கைகளை அறிந்து கொள்வதற்கு TN SMART என்ற செயலியினை பொதுமக்கள் பதிவிறக்கம் செய்து கொள்ளுமாறும் அறிவுறுத்தப்படுகிறது.

மேலும், பேரிடர்கள் தொடர்பான பாதிப்புகள் மற்றும் புகார்களை மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வருவாய் கோட்ட அலுவலகம் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களில் 24 மணி நேரமும் இயங்கும் கட்டுப்பாட்டு அறைக்கும் கீழ்க்கண்ட தொலைபேசி எண்ணுக்கும் தெரிவிக்கலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப, அவர்கள் தெரிவித்துள்ளார்,

| | | | |
|---|---|---|---|
| 1 | மாவட்ட ஆட்சியர் அலுவலகம் | 1077 | 9345336838 |
| 2 | வருவாய் கோட்ட அலுவலகம், தஞ்சாவூர் | 04362-238033 | 9445000465 |
| 3 | வருவாய் கோட்ட அலுவலகம், கும்பகோணம் | 0435-2430101 | 9445000466 |
| 4 | வருவாய் கோட்ட அலுவலகம், பட்டுக்கோட்டை | 04373-237047 | 9445000467 |
| 5 | வட்ட அலுவலகம், தஞ்சாவூர் | 04362-230456 | 9445000630 |
| 6 | வட்ட அலுவலகம், திருவையாறு | 04362-260248 | 9445000631 |
| 7 | வட்ட அலுவலகம், பூதலூர் | 04362-288107 | 9626496946 |
| 8 | வட்ட அலுவலகம், ஒரத்தநாடு | 04372-233225 | 9445000632 |
| 9 | வட்ட அலுவலகம், கும்பகோணம் | 0435-2430227 | 9445000633 |
| 10 | வட்ட அலுவலகம், பாபநாசம் | 04374-222456 | 9445000635 |
| 11 | வட்ட அலுவலகம், திருவிடைமருதூர் | 0435-2460187 | 9445000634 |
| 12 | வட்ட அலுவலகம், பட்டுக்கோட்டை | 04373-235049 | 9445000636 |
| 13 | வட்ட அலுவலகம், பேராவூரணி | 04373-232456 | 9445000637 |

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.